கூடுதல் சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு
முன்னிலை: D.மோகன்குமார்.,B.Com.,M.L.,
கூடுதல் சார்பு நீதிபதி, திருச்செங்கோடு.
2025–ம் ஆண்டு ஜீலை திங்கள் 01–ம் செவ்வாய்கிழமை
IA 1/2023, 2/2023 மற்றும் 3/2023 in AS.No. 06/2021

1. செல்லம்மாள், (இறந்தார்)
2. மணிமேகலை
3. ரவிச்சந்திரன்
4. உமாமகேஸ்வரி

– மனுதாரர்கள்/மேல்முறையீட்டாளர்கள்

/எதிராக/

1. அருணாசலம்
2. பாரதி
3. செங்கோடன், (இறந்தார்)
4. நல்லையன்
5. ஜெயவேல்
6. சரஸ்வதி
7. சிவகாமி

– எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

8. ராஜம்மாள்
9. சுமதி
10. சித்ரா
11. சசிகலா

– எதிர்மனுதாரர்கள் /உத்தேசதரப்பிரனர்கள்

இம்மனு என் முன்பாக 01.07.2025–ம் தேதியில் இறுதி விசாரணைக்காக வந்தபோது 2, 3, 4 மனுதாரர்கள்/ மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.K.அம்பலத்தரசு, அவர்கள் ஆஜராகியும், 1–ம் மனுதாரர்/மேல்முறையீட்டாளர் இறந்துவிட்டபடியாலும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.சந்திரசேகரன், அவர்கள் ஆஜராகியும், 3–ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி இறந்துவிட்டபடியாலும், 4 முதல் 7 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தோன்றா தரப்பினராக கருதப்பட்டும், 8 முதல் 11 எதிர்மனுதாரர்கள்/உத்தேசதரப்பினர்கள் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் தோன்றா தரப்பினராக கருதப்பட்டும், மனுதாரர்கள்/மேல்முறையீட்டாளர்கள் மற்றும் 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் அனைத்தும் பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## பொதுவான உத்தரவு

மனுதாரர்கள்/மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் இறந்துபோன 3–ம் எதிர்மனுதாரர் வாரிசுகளை உரிய காலத்தில் தரப்பினராக சேர்க்காத காரணத்தினால் மேற்படி வழக்கு

அற்றுபோய்விட்டது. காலதாமதமான 60 நாட்களை மன்னிக்க கோரி காலவரையறை சட்டம் பிரிவு 5–ன் கீழ் இ.ம.எண்.1/2023 என்ற மனுவும், 3–ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் வாரிசுதாரர்களை உத்தேசதரப்பினர்களாக சேர்க்க தவறியதால் ஏற்பட்ட வழக்கு ரத்துபோன உத்தரவினை (Abate) ரத்து செய்வதற்காக உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 22, விதி 9–ன் கீழ் இ.ம.எண் 2/2023 என்ற மனுவும், மேற்படி உத்தேசதரப்பினரை 8 முதல் 11 வரையிலான பிரதிவாதிகளாக சேர்க்க அனுமதி வேண்டி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 22 விதி 4–ன் கீழ் இ.ம.எண். 3/2023 என்ற மனுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :–**

இந்த மனுக்கள் சார்ந்த வழக்கானது திருச்செங்கோடு மாண்புமிகு கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் கடந்த 23.11.2020–ம் தேதியன்று O.S.No.344/2015–வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக மேல்முறையீட்டார்கள் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும். மேற்படி மேல்முறையீட்ட வழக்கு நிலுவையில் உள்ள போது 3–ம் எதிர்மனுதாரர் செங்கோடன் கடந்த 17.05.2022–ம் தேதியன்று 8 முதல் 11 எதிர்மனுதாரர்கள்/உத்தேசதரப்பினர்களை அவரது வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். அந்த விபரம் கடந்த 17.10.2022–ம் தேதியன்று தெரியவந்த அன்றே மனுதாரரால் நீதிமன்றத்தில் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி இறந்து போன 3–ம் பிரதிவாதியின் வாரிசுகளை உரிய காலத்தில் தரப்பினர்களாக சேர்க்காமல் வழக்கு அற்று போய்விட்டதால், அந்த அற்றுப்போன உத்தரவை ரத்து செய்ய மனு தாக்கல் செய்ய ஏற்பட்ட 60 நாட்கள் காலதாமதத்தினை மன்னிக்கக்கோரி பிரிவு 5–ன் கீழான காலவரையறை சட்டத்தின் கீழ் இ.ம.எண். 1/2023 என்ற மனுவும், 3–ம் பிரதிவாதி இறந்த தேதியிலிருந்து உரிய காலமான 90 நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்காததால் மேற்படி மனு ரத்து செய்யப்பட்டதை (Abate) ரத்து செய்வதற்காக உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 22, விதி 9–ன் கீழ் இ.ம.எண் 2/2023 என்ற மனுவும், மேற்படி உத்தேசதரப்பினர்களை இந்த மனுவில் 8 முதல் 11 பிரதிவாதிகளாக சேர்க்க அனுமதி வேண்டி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 22, விதி 4–ன் கீழ் இ.ம.எண். 3/2023ள என்ற மனுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **1–ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்து 2–ம் எதிர்மனுதாரர் தமதாக ஏற்றுக்கொண்ட எதிருரையின் சுருக்கம்** :–

மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. மனுவில் 1, 2–ம் எதிர்மனுதாரர்கள் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். மேற்படி வழக்கானது விளம்புகை பரிகாரம் மற்றும்

நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டதாகவும், மேற்படி தாவாவிலும், 3–ம் எதிர்மனுதாரர் உயிருடன் இருந்த காலத்திலேயே தோன்றாதரப்பினராகி, மேற்படி வழக்கை முன்னின்று நடத்தவில்லை என்றும், மேற்படி வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பையும், தீர்பாணையையும் எதிர்த்து மேல்முறையீட்டு வழக்கிலும் 3–ம் எதிர்மனுதாரர் தோன்றா தரப்பினராக உள்ள காரணத்தினால் அவருடைய வாரிசுகளை மேல்முறையீட்டு வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்றும், மனுதாரர், மேல்முறையீட்டு வழக்கில் காலம் சென்ற 3–ம் எதிர்மனுதாரர் தோன்றா தரப்பினராக உள்ளதால் கட்டளை 22 விதி 4(4)–ன்படி மனு தாக்கல் செய்ய வேண்டும் என்றும், அவ்வாறு மனுதாரர் மனுவை தாக்கல் செய்யதாததால் மேற்படி மேல்முறையீட்டு வழக்கை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்திற்காக இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர்கள் மனுவில் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றும், எனவே மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறும் சொல்லப்பட்டுள்ளது.

4) உத்தேசதரப்பினர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது. அதனை பெற்றுக்கொண்டு அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தினால் கடந்த 21.03.2023–ம் தேதியன்று ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்கள்.

5) இருதரப்பிலும் சாட்சியங்கள் யாரும் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6) மனுதாரரின் மனு, எதிருரை மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டிய சங்கதி என்னவென்றால் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? அல்லது இல்லையா? என்பதாகும்.

<u>7) தீர்வு :–</u>

i) மனுதாரர்கள் மேல்முறையீட்டு வழக்கில் மேல்முறையீட்டாளர்கள். மேற்படி வழக்கு நிலுவையில் இருந்த போது 3–ம் எதிர்மனுதாரர் செங்கோடன் இறந்துவிட்டார் என்றும், மேற்படி அவருக்கு ராஜம்மாள் என்ற மனைவியும், சுமதி, சித்ரா மற்றும் சசிகலா என்ற மூன்று மகள்களும் வாரிசுகள் என்றும், மேற்படி 3–ம் எதிர்மனுதாரர் இறந்த விவரம் சம்மந்தமாக கடந்த 17.10.2022–ம் தேதியில் குறிப்பாணை தாக்கல் செய்ததற்கு பின்னிட்டே இந்த

மனுதாரர்களுக்கு தெரிய வந்தது என்றும், எனவே உரிய காலத்தில் மனுதாக்கல் செய்ய இயலவில்லை என்றும், மேற்படி இறந்து போன செங்கோடனின் வாரிசுகளை தரப்பினர்களாக சேர்க்க கோரி இந்த மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ii) இந்த மனுவில் உத்தேசதரப்பினர்களான இறந்து போன செங்கோடனின் வாரிசுகளுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. அதனை பெற்றுக்கொண்ட அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் ஒருதலைபட்சமாகிவிட்டார்கள். இறந்து போன செங்கோடனின் வாரிசுகள் இந்த உத்தேசதரப்பினர் இல்லை என்றோ, மேலும் அவருக்கு பிற வாரிசுகள் இருப்பதாகவோ பதிலுரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை. எதிர்மனுதரர்களின் அடிப்படை எதிர்வாதமே ஏற்கனவே 3–ம் எதிர்மனுதாரர் செங்கோடன் பிரதான வழக்கில் ஒருதலைபட்சமாகிவிட்டதால் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 22 விதி 4(4)–ன் கீழ் 3–ம் எதிர்மனுதாரரின் சட்டப்படியான வாரிசுகளை பிரதான வழக்கில் சேர்க்க வேண்டிய அவசியமில்லை என்பதாகும். வழக்காவணங்களை பரிசீலிக்கையில் இந்த மேல்முறையீடு சார்ந்த பிரதான வழக்கானது உரிமை விளம்புகை மற்றும் இதர பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும். மேலும் பிரதான வழக்கில் கோரப்பட்ட பரிகாரங்களில் ஒன்று கடந்த 05.03.2010–ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் செல்லாது என்ற பரிகாரமாகும், எனவே, மேற்படி சொத்து சம்மந்தப்பட்ட அனைத்து தரப்பினர்களும் உரிமையை நிர்ணயம் செய்வதற்கு அவசிய தரப்பினர்கள் ஆவார்கள். இறந்து போன 3–ம் எதிர்மனுதாரரின் சட்டப்படியான வாரிசுகளை சேர்ப்பதால் எவ்வித அநீதியும் இருதரப்பினருக்கும் ஏற்படாது. மேலும் வழக்கினை தீர்மானிப்பதற்கு ஏதுவாக அமையும். ஆகையால் நீதியின் நலன் கருதி இந்த மனுக்கள் அனுமதிக்கப்படுகின்றன. செலவுத்தொகை இல்லை.

இ.ம.எண். 1/2023

இறுதியாக, மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இ.ம.எண். 2/2023

இறுதியாக, மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இ.ம.எண். 3/2023

இறுதியாக, மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு பின்னர் 2025–ம் ஆண்டு ஜீலை திங்கள் 01–ம் நாள் இன்று திறந்த நீதிமன்றத்தில் உத்தரவு அவையறிய பகரப்பட்டது.

D MOHANKUMAR Digitally signed by D MOHANKUMAR Date: 2025.07.01 20:21:21 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருச்செங்கோடு.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

D MOHANKUMAR Digitally signed by D MOHANKUMAR Date: 2025.07.01 20:21:40 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருச்செங்கோடு.

கூடுதல் சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு.
அசல்/வரைவு/உத்தரவு
இ.ம.எண். 01/2023, 02/2023,
03/2023 இன் மே.வ.எண்.06/2021
நாள்.01.07.2025.